REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 8உ திங்கள் (21—3—55) ★ ★ வெளியூர்: பங்குனி 9உ செவ்வாய் (22—3—55) [இதழ் 238

இந்தியாவில் 6 ஆண்டுகளில் அணுசக்தி மின்சாரம்!

இன்னும் ஐந்தாண்டுகளில் இந்தியாவில் முதல் அணுசக்தி மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படுத்தப்பட்டுவிடும் என்றும், பின்னர் ஆண்டொன்றுக்கு ஒரு நிலையம் வீதம் நிர்மாணிக்கப்படும் என்றும் அணுசக்திக் குழுவின் தலைவரான டாக்டர் பாபா இங்கு கூறியிருக்கிறார்.

ஒவ்வொரு அணுசக்தி மின்சார உற்பத்தி நிலையத்திற்கும் ரூ. 20 கோடி செலவாகலாமென்றும், இன்னும் 6 ஆண்டுகளில் இந்தியாவில் முதன் முதலாக அணுசக்தி மின்சாரம் கிடைக்குமென்றும் கூறினர்.

'கடனைத் திரும்பப் பெற கிராமங்களில் நுழையாதே'

'நகரக் கடைவீதியோடு உங்கள் கெடுபிடி நிற்கட்டும்'

'கட்டளையை மீறினல் கடும் நடவடிக்கைக்குள்ளாவீர்கள்'

மார்வாரிகளுக்கு சிக்கிம் மகாராஜா உத்தரவு

காலிம்பாங், மார்ச் 18—

கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதற்காக மார்வாரிகளும், அந்தொழில் புரியும் மற்ற இந்தியர்களும், சிக்கிம் நாட்டின் சிற்றூர்களில் கண்டிப்பாக நுழையக்கூடாது என மகாராஜா கட்டளை பிறப்பித்திருக்கிறர்.

பணம் கொடுத்து வாங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மார்வாரிகளும், மற்றவர்களும் தங்களுடைய தொழிலை நகரக் கடை வீதி அளவோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமெனவும், மீறி சிற்றூர்களுக்குள் காலெடுத்து வைப்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் எனவும் மகாராஜாவின் மேற்படி கட்டளை எச்சரித்திருக்கிறது.

சிக்கிம் நாட்டின் பல பகுதிகளில் வியாபாரம் செய்து வருபவர்கள் பெரும்பாலும் மார்வாரிகளும், மற்ற இந்தியர்களுமேயாவர். அவர்கள் வியாபாரம் அனைத்தும் கடன்கொடுத்து வாங்குவதையே அடிப்படையாகக் கொண்டு நடைபெற்று வருவதாகும். மேற்படி வியாபாரிகளிடமிருந்து கடனுகப் பொருட்களை வாங்கிச் செல்பவர்களில் சிற்றூர் மக்களே பெருந் தொகையினராவர். மகாராஜாவின் புதிய உத்திரவு மார்வாரி வியாபாரிகளுக்குப் பேரிடியாக முடிந்திருக்கிறது.

சிற்றூர் மக்களின் நலங்கருதியே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக அரண்மனை சார்பில் விளக்கப்படுகிறது.

இமயத்தின் அடிவாரத்தை ஒட்டியுள்ள நேபாளத்தை அடுத்துள்ள சிறிய நாடுதான் சிக்கிம் ஆகும். அங்கு மகாராஜாவின் நேரடி ஆட்சிதான் நடைபெற்று வருகிறது. அங்கு வியாபாரம் முதல் தொழில்கள் வரை அனைத்தும் மார்வாரி-குஜராத்தி-சிந்தி ஆகியவர்கள் வசமே இருந்துவருவது கருதத்தக்கது.

பாகிஸ்தானில் குழப்பத்திற்கு மேல் குழப்பம்

சிந்து முன்னாள் முதன்மந்திரியும் சட்டசபைத் தலைவரும் கைது!

15 சட்டசபை உறுப்பினர்களுக்கு 'வாரண்ட்'

மாநில மந்திரிகளைக் கொன்று கலகம் விளைவிக்க சதி செய்தனராம்

கராச்சி, மார்ச் 20—

சிந்து சட்டசபைத் தலைவரும், முகம்மது அலியின் முந்திய மந்திரி சபையில் கல்வி மந்திரியாயிருந்தவருமான மீர்குலாம் அலி கான் தால்பூர் என்பவர், சிந்து மந்திரிகளைக் கொன்று சிந்து மாநில முழுதும் பரவலாக கலவரம் விளைவிக்க சதி செய்தார் என்று கூறி கைது செய்யப்பட்டிருக்கிறர் என்ற தகவல், டெலிபோன் மூலம் தால்பூரின் மகனுக்குக் கிடைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சிந்து சர்க்கார், தன்னை, சபைத் தலைவராகப் பதவிவகிக்க முடியாது தடுத்தது தவருனது என்று கூறி, சிந்து பிரதம நீதிமன்றத்தில் மீர்குலாம் அலி கான் தால்பூர் வழக்குத் தொடர்ந்திருக்கிறர். நீதிமன்றம் இடைக்கால உத்திரவு பிறப்பித்துவிட்டு, வரும் செவ்வாயன்று, வழக்கை விசாரிக்கவிருக்கிறது.

மீர் குலாம் அலிகான் செய்த சதிச் செயலில் முக்கியமான சில அரசியல் வாதிகளுடன், ஜாகீர்தார்களும் கலந்துள்ளனர் என்று சிந்து மாநில விளம்பர அமைச்சர் மொகமது ரஷீத் தெரிவித்திருக்கிறர்.

இந்த சதிச்செயலையொட்டி, சிந்து சர்க்கார், சட்டசபையிலுள்ள 15 உறுப்பினர்களைக் கைது செய்யும்படி 'வாரண்டு' பிறப்பித்துள்ளது. இதன்படி, சிந்து முன்னுள் முதலமைச்சர் இலாகி பக்ஷியும், முன்னுள் அமைச்சர் நாபி பத்தானும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

சிந்து மாநில சர்க்கார், அண்மையில், எவ்வித நஷ்டயீடுமின்றி ஜாகீர்தார் முறையினை ஒழித்துவிட வேண்டுமென்று முடிவு செய்துள்ளதை ஆட்சேபித்துத் தங்கள் எதிர்ப்பைக் காட்டவேண்டுமென்ற காரணம்தான் இச்சதிச்செயலுக்கான காரணம் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறர்.

சர்க்காரின் மேற்படி திட்டம், 100-க்கு மேற்பட்ட நிலப் பிரபுக்களைப் பாதிக்கிறது. அது தவிர, இதுவரையிலும் ஏழை மக்களுக்கென வினியோகிப்பதற்காக ஜாகீர்தார்களிடமிருந்து 10,00,000 ஏகர் நிலத்திற்கு மேல் கைப்பற்றப்பட்டுள்ளன.*

மேற்படி, சதிச் செயல்கள் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில் அமைச்சர் ரஷீத், சிந்து சர்க்கார் கிரிமினல் குற்ற இலாகா மூலம், சட்டப்படி விசாரணைகள் நடைபெறும் என்று குறிப்பிட்டுவிட்டு, "ராவல் பிண்டி—லாகூர் ஆகியவற்றில் நடைபெற்றவை போன்று, சிந்து மாநில மண்ணில் நிச்சயமாக நடைபெற விடமாட்டோம்; இப்படிப்பட்ட செயல்களைச் செய்வோர் மீது கடும் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்" என்றும் தெரிவித்தார்.

கிழக்கு வங்கத்தில் - ஜனநாயக ஆட்சி

பஸ்லுல் ஹக் மீண்டும் பிரதமர்?

டாக்கா, மார்ச் 20—

கிழக்கு வங்கத்தில் ஜனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட்டால், மீண்டும், ஐக்கிய முன்னணி தலைவரான பஸ்லுல் ஹக்கே முதன் மந்திரியாக வரக்கூடுமென்றும், அப்படி அவர் முதன் மந்திரியானலும் மந்திரிசபை மட்டும் ஐக்கிய முன்னணி மந்திரிசபையாக இருக்காது என்றும் இங்கு கருதப்படுகிறதாம்.

முன்னணிக் கட்சியிலுள்ள அவாமி லீகினர், ஹக்கின் புதிய மந்திரிசபையில் சேரமாட்டார்களென்றும், ஆனலும் தற்போதைய நிலைமைக்கு, அவாமி லீக் ஒரு 'தீவிர' எதிர்க் கட்சியாக இருக்காது என்றும் சொல்லப்படுகிறது.

அரசியல் சட்டத்தை - ஏன் கொளுத்த வேண்டும்?

'கடவுளர்'களுக்காகக் கட்டிய கோவிலில் சைத்தான்கள் குடியேறிவிட்டன!

டாக்டர் அம்பேத்கார் தரும் விளக்கம்

அரசியல் சட்டம் என்ற கோவிலினுள் 'சைத்தான்'கள் குடியேறிவிட்டதாக, அரசியல் சட்டக் கர்த்தாவான டாக்டர் அம்பேத்கார், டில்லி மேல்சபையில் குறிப்பிட்டிருக்கிறர்.

அரசியல் சட்டத் தயாரிப்புக் குழுத் தலைவராக விளங்கிய அவர், கடந்த கூட்டத்தில் தான் ஏன் அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும் என்று கூறினர் என்பதை விளக்குமுகத்தான், அவர் பேசுகையில், "அரசியல் சட்டம் என்ற அதிசயக் கோவிலை நாம் 'கடவுளர்'கள் குடியேறுவதற்காகக் கட்டினேம்; ஆனல், 'கடவுளர்'களை நாம் அங்கு 'பிரதிஷ்டை' செய்யுமுன், 'சைத்தான்'கள் அங்கு குடியேறிவிட்டன; எனவே, நாம் செய்யக்கூடிய ஒரே காரியமெல்லாம், கோவிலையே அழித்துவிடுவதுதான்," என்றுர்.

பி. கே. பி. சின்ஹா என்பவர், 'ஏன் கோவிலை அழிக்க வேண்டும்—சைத்தான்களை விரட்டக் கூடாதா?' என்று கேட்டபோது, டாக்டர் அம்பேத்கார்,

"அது முடியாதது; நீங்கள் 'சதபாதக பிராமணு' என்ற நூலைப் படித்தால் எப்போதுமே, தேவர்கள் அசுரர்களால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறர்கள் என்பதைக் காண முடியும்," என்று குறிப்பிட்டிருக்கிறர்.

இம்பீரியல் பாங்கி: மத்திய சர்க்கார் மேற்கொள்ளும்?

இம்பீரியல் பாங்கியை, வருகிற ஜூலை மாதத்தில், சர்க்காரே மேற்கொண்டு நடத்துவதென தீர்மானித்துள்ளதாகவும், இதற்கான மசோதா ஒன்று இப்போது நடைபெற்று வரும் மக்கள் சபைக் கூட்டத்தின்போதே கொண்டுவரப்படும் என்றும் ரெவினியூ அமைச்சர் குஹா தெரிவித்திருக்கிறர்.

'வேலையில்லாக் கொடுமை சென்னையிலேயே அதிகம்'

பண்டித நேருவின் ஒப்பம்

சாந்திகார், மார்ச் 20—

'வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை, பஞ்சாபைக் காட்டிலும் சென்னையிலும், வங்கத்திலும் சற்றுக் கடுமையானதாக இருக்கிறது. இன்னும் சில தினங்களில், இந்த வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு புது டில்லியில் முடிவு மேற்கொள்ளப்பட இருக்கிறது."

—என்று பிரதமர் பண்டித நேரு கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறர்.

"அழிவு மிகுந்த சாதிமுறைகள், நாட்டு முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயும், தேசிய, நாட்டுப்பற்று உணர்வு வளர்ச்சியைக் கெடுத்தும் வந்திருப்பதே, இந்தியாவின் பலக்குறைவாகும்.

"நாம் சாதிகளை ஒழித்தாலன்றி ஜனநாயகம் முழுமை பெருது; 'சோஷலிசம் மாதிரி' சமூக அமைப்பும் பெற முடியாததாகி விடும்;

"சாதிகளை ஒழிக்க எவ்வளவு நாளாகுமோ எனக்குத் தெரியாது; ஆனலும் நாம் சாதிகளை ஒழித்துத்தாகுக வேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறர்.

"இப்போதுள்ள மொழித் தகராறுகள் நிலையானவை அல்ல; இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் அலுவலக வேலைகள் முழுவதும், ஆங்கிலத்தில் நடைபெருது; ஆகவே, மக்கள் பலனற்ற தகராறுகளில் தங்கள் ஆவியைப் போக்கிக்கொள்ள வேண்டாம்,"

என்றும் பண்டித நேரு குறிப்பிட்டிருக்கிறர்.

உண்ணுவிரதம் நீடிப்பு

நால்வருக்கு பிரயாண அனுமதி

கள்ளக்குடியேற்றக் குற்றச்சாட்டின்மீது, தற்போது தலைமன்னர் காவல் முகாமில் வைக்கப்பட்டுள்ள 10 பேர் உண்ணுவிரதம் இருந்து வருகின்றனரல்லவா? இப்போது, இலங்கை சர்க்கார் கேட்டுக்கொண்டதின்பேரில் அவர்களில் 4 பேருக்கு கொழும்பில் உள்ள இந்திய ஹைகமிஷனர், இந்தியாவிற்குச் செல்ல பிரயாண அனுமதிச் சீட்டுகள் வழங்கியுள்ளாராம்.

அந்த 4 பேர்களும் இந்தியாவிற்கு அனுப்பப்படுவர் என்றும், இந்தியத் தூதுவர் அலுவலக அதிகாரிகளுக்கும், இலங்கை சர்க்காருக்குமிடையே உள்ள ஒத்துழைப்பை உத்தேசித்துத்தான் அந்த 4 பேர்களுக்கும் பிரயாண அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணதுரை

சென்னை 21—3—'55 திங்கள்

கைத்தறி நிலை!

குடிசைத் தொழில்கள் அனைத்திலும் கைநெசவு முன்னணியில் இருப்பதாகும். தென்னாட்டைப் பொறுத்த வரையில், உழவிற்கு அடுத்த படியாக பெரும் மூலத்தொழிலாக இருந்துவருவதும் கைநெசவுதான் என்பதும் மிகையாகாது.

கைநெசவை நம்பி, இலட்சக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இருக்கின்றன. அவர்களுக்கு என்றும்போல் வாழ்க்கைத்தரம் மிக மிகக் குறைவான நிலையிலேயே இன்றும் இருந்து வருகிறது.

அவர்களின் குறைவான வாழ்க்கைத்தரமும் நிரந்தரமாக தீர்ந்திருக்கும் ஒன்ருகக் கொள்வதற்கில்லை. வானம் பார்த்த பயிர்போல், கைத்தறி நெசவாளர்களும் அடிக்கடி வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாகி, தொடர்ந்தாற்போல் பலநாள் பட்டினி கிடக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

நெசவாளர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கவும், அடுத்தடுத்து பட்டினிக்குப் பலியாகாமல் அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றவும் அரசாங்கமும், அதன் முயற்சிக்குக் கொஞ்சமும் பின்வாங்காத நிலையில் மற்ற பொதுமக்களும் விழிப்புடன் செயலாற்ற வேண்டும். அப்பொழுதுதான் கைநெசவுவளர்வதும், அதையே நம்பிக்கிடக்கும் நெசவாளர்கள் நல்வாழ்வு பெறுவதும் வெற்றிகரமாக நடைபெற்றுவரக் கூடும்.

பொதுவாகக் கைத்தொழில்கள்—குறிப்பாகக் கைநெசவு, இயந்திர இயக்கத்தின் பெருக்கத்தால் மெள்ள மெள்ளச் செத்து வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். தங்களுடைய சுய இலாபம் கருதி, அன்று ஆதிக்கம் பெற்றிருந்த ஆங்கில ஏகாதிபத்தியத்தினர், உள்நாட்டு குடிசைத் தொழிலை வேண்டுமென்றே கொன்றுவிட்டனர் என, சமீபகாலம் வரையில் காங்கிரஸ் தலைவர்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறிவந்ததை, இதற்குள் ஒருவரும் மறந்திருக்க முடியாது. கெடுமதி கொண்ட ஆங்கிலேயர்கள் ஆதிக்கத்தை விட்டு விலகிய பின்னரும், கைநெசவு உள்பட மற்ற நமது குடிசைத் தொழில்கள் அனைத்தும், அன்றுபோன்றே இன்றும் நலிவுற்றுக் கிடக்கின்றன என்ருல், அதிகாரம் வேறு கைக்கு மாறியிருந்தபோதிலும், குடிசைத் தொழில்களை நாசஞ் செய்துகொண்டிருந்த கொடும் நிலையில் எந்தவித மாற்றமும் இன்றும் ஏற்பட்டுவிடவில்லை என்ற உண்மையைத்தானே, அது விளக்குவதாக இருக்கிறது?

அன்று ஆங்கில முதலாளிகள் சொந்த இலாபம் கருதி உள்நாட்டுக் கைநெசவை வேண்டுமென்றே அழித்துவந்தனர். இன்ருே அதே நாசச் செயலை, வடநாட்டு ஆலை அரசுகள் முன்னிலும் தீவிரமாகச் செய்துவருகின்றன. கைப்பான—ஆனல், உறுதியான மேற்குறிப்பிட்டுள்ள உண்மையைத்தான், இன்று கை நெசவிற்கு ஏற்பட்டுவரும் வளர்ச்சியும் வீழ்ச்சியும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன.

நெசவாலைகளின் போட்டியிலிருந்து கைநெசவைக் காப்பாற்றி வளர்க்க ஆற்றல் மிக்க ஏற்பாட்டை உடனடியாகச் செய்ய அரசாங்கம் முன்வந்தால் அல்லாது, வெறும் பகட்டான பிரச்சாரத்தாலும், கூட்டுறவு முறையில் உற்பத்தியும், விற்பனையும் செய்துவிடுவதாலும், கைத்தறித் துணிகளை வாங்குபவர்களுக்கு விலைக் கழிவு வழங்கிவிடுவதாலும், கைநெசவைக் காப்பாற்றிவிட முடியாது—முக்காலும் முடியாது.

இந்த மகத்தான உண்மையைத்தான், சென்னை அரசாங்கத்தின் சார்பில் தொழில் அமைச்சர் கனம் பக்தவத்சலனர், விற்பனையாகாது தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகள் பற்றி, சட்டசபையில் பாடியுள்ள முகாரி நமக்கு நினைவு படுத்துகிறது.

ரூ. 50 இலட்சம் விலை மதிப்பிடத்தக்க கைத்தறி ஆடைகள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் தேங்கிக் கிடக்கின்றன என அமைச்சர் அறிவித்துள்ளார். கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்கப்பட்ட நான்கு மாதத்திற்கும் கூடுதலான மாதத்தில் விற்பனையான மொத்தத் துணி விலையின் மதிப்பீடு இது எனவும் அமைச்சர் விளக்கியுள்ளார்.

சென்னை மாநில அரசாங்கக் கைநெசவு கூட்டுறவு விற்பனை நிலையத்தில் ரூ. 50 இலட்சம் மதிப்புடைய துணி மட்டுமே தேங்கிக் கிடப்பதாக எண்ணிவிட வேண்டாம். மேலும் பல இலட்ச ரூபாய் கணக்கில் மதிப்பிடக்கூடிய துணிகள் ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி நிலையங்களில் தேங்கிக்கிடக்கின்றன. இத்துடன் தனிநபர் வியாபார நிலையங்களில் முடங்கிக் கிடக்கும் கைநெசவுத் துணிகளின் விலை மதிப்பையும் கூட்டிக்கொள்ளத்தான் வேண்டும்.

நெசவாளர் கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களிலிருந்து ஒரு மாதத்தில் உற்பத்தியாகும் மொத்தத் துணியில் நான்கில் ஒரு பங்கைத்தான் அரசாங்கக் கைத்தறிக் கூட்டுறவு விற்பனை சங்கம் கொள்முதல் செய்துவந்திருக்கிறது. மீதமுள்ள முக்கால் பங்கை, கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் சொந்தத்தில் விற்பனை செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டு வந்தன.

மாநில கூட்டுறவு விற்பனை சங்கம் ஒரு மாதத்தில் கொள்முதல் செய்த—அல்லது செய்யும் மொத்த உற்பத்தியில், நான்கில் ஒரு பங்கின் விலை மதிப்பு மட்டும் ரூ. 30 இலட்சம் ஆகிறது எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மொத்த உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கின் விலை மதிப்பு மட்டுமே ரூ. 30 இலட்சமானல், மீதமுள்ள நான்கில் மூன்று பங்கின் விலை மதிப்பு 90 இலட்சம் ரூபாய் ஆகிறது.

மாநில கூட்டுறவு விற்பனை சங்கத்தில் விற்பனையாகாமல் கையிருப்பிலிருக்கும் துணியின் மதிப்பு ரூ. 50 இலட்சமாகுமானல், கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு சொந்தப் பொறுப்பில் தனிநபர்களுக்கு விற்கப்பட்டு, அவர்களிடம் விற்பனையானது போக ரூ. $1\frac{1}{2}$ கோடி மதிப்புடைய துணிகள் தேங்கி இருக்கக்கூடும் எனக் கணக்கிடலாம். எனவே, நமது சென்னை மாநிலத்தில் மட்டும் விற்பனை நிலையங்களில் தேங்கிக் கிடக்கும் மொத்தத் துணியின் விலை மதிப்பு ஏறத்தாழ ரூபாய் இரண்டு கோடிக்கு இருக்கக் கூடும் என முடிவு கட்டலாம். இது குறைவான மதிப்பீடு தான் என்பதில் ஐயமில்லை.

நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி சங்கத்தின் மொத்த விற்பனையிலிருந்து பெறப்படும் மதிப்பீடே இது. இத்துடன் கூட்டுறவு சங்கங்களில் சேராது தனித்த முறையில் உற்பத்தி செய்யும் நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்ததில், விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும் துணியின் மதிப்பையும் கூட்டிக்கொள்ள வேண்டும். மொத்தத்தில் தேங்கிக்கிடக்கும் கைத்தறித் துணியின் மதிப்பு ரூ. 2 கோடிக்கும் கூடுதலாகும் என்பது விளக்கமாகும்.

எனவே, கைத்தறியில் நெய்யப்படும் துணி இனங்களை ஆலைகள் கண்டிப்பாக நெய்யக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டாலல்லாது, கைநெசவுத் தொழிலுக்கு நிரந்தர பாதுகாப்பு ஏற்படாது என்பது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

சர்ச்சில் விலகுகிருரா?

அனேகமாக இன்னும் இரண்டு வாரங்களில் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் தமது பிரதமர் பதவியை துறந்துவிடலாம் என்று பிரிட்டன் மக்கள் சபையைச் சேர்ந்த கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினரிடையே பலத்த அபிப்பிராயங்கள் வலுத்து வருகின்றன என்று கூறப்படுகிறது.

சர்ச்சில் விலகிவிட்டாரானல், அடுத்தாற்போல் சர். அந்தோணி ஈடன் பிரதமராக வரலாம் என்றும் கருதப்படுகிறது.

அணுகுண்டுகள் விளைவிக்கும் ஆபத்து

அமெரிக்க விஞ்ஞானியின் எச்சரிக்கை

"அணு அல்லது நீர்வளிக் குண்டுகளை வெடிக்க வைப்பதால் ஏற்படும் கதிரியக்க மழையினல், மக்களின் உற்பத்தி உறுப்புகளில் பல மாறுதல்கள் ஏற்பட்டு, அதன் விளைவாக விசித்திரமான பிறவிகள் பிறக்கக் கூடும்; இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களின் உற்பத்திப் பெருக்கம் திடீரென அதிகமாகும் 'லூகிமியா' போன்ற ஆபத்தான வியாதிகளும் தோன்றக்கூடும்."

இவ்வாறு, சென்ற ஆண்டில் இரசாயன ஆராய்ச்சித் துறையில் 'நோபல்' பரிசு பெற்ற அமெரிக்க விஞ்ஞானியான லைனஸ் பாலிங் என்பவர், அணு, நீர்வளிக் குண்டுகளின் ஆபத்தைத் தெரிவிக்கும் வகையில் எச்சரித்துள்ளார்.

மேலும் அவர், "இந்தக் குண்டுகள் உலகத்தவருக்கு அளிக்கும் பலப் பல தீமைகளைக் கருதி உடனடியாக அவற்றைத் தடைசெய்ய வேண்டும்," என்ருர்.

போர்க்கால இரகசியங்கள்!

கடந்த யுத்த முடிவில்—1945-ம் ஆண்டில், யால்டாவில் நடைபெற்ற மூன்று வல்லரசுகள் மாநாட்டின்போது, அந்நாள் அமெரிக்கக் குடியரசு தலைவர் பிராங்க்ளின் ரூஸ்வெல்ட், ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் ஆகிய இருவரும் நடத்திய பேச்சுக்கள் பற்றிய இரகசியக் கடிதங்களை அமெரிக்க அரசாங்க இலாகா வெளியிட்டுள்ளது

ஜப்பான் மீது ரஷ்யா யுத்தம் தொடுப்பது பற்றிய பிரச்சினைகளும் அந்த இரகசிய தஸ்தாவேஜுகளில் இடம் பெற்றிருக்கின்றன.

ரஷ்யா, டெய்ரென் துறைமுகம் தனக்கு வேண்டுமென்று கேட்டதாகவும், அதற்கு ரூஸ்வெல்ட், சீனவில் பிரிட்டிஷ் காலனியாயுள்ள ஹாங்காங் துறைமுகத்தை வேண்டுமானல் சீனவுக்கு ஒரு சர்வதேசத் துறைமுகமாக உபயோகித்துக்கொள்ளுமாறு ஸ்டாலினிடம் இரகசியமாகக் கூறினராம். யால்டா மாநாட்டின் போது, சர்ச்சிலுக்குத் தெரியாமல் ரூஸ்வெல்டும், ஸ்டாலினும் இரகசியமாகச் சந்தித்துப் பேசியுமுள்ளனராம்.

இந்தோ-சீனவை பிரெஞ்சுக்காரர்களிடமும், கொரியாவை பிரிட்டிஷாரிடமும் தருவதற்குப் பதிலாக, அவைகளை 'தர்மகர்த்தா பாதுகாப்புக் குழு'விடம் தந்துவிடலாம் என்று ரூஸ்வெல்ட் கருத்தறிவித்திருக்கிருர்.

'கொரிய 'தர்மகர்த்தா பாதுகாப்புக் குழு'விற்கு பிரிட்டனையும் அழைக்க வேண்டும்; அதில் அமெரிக்கா, சீன, ரஷ்யா மட்டும் கலந்து கொள்வது கூடாது; பிரிட்டனை அழைக்காவிட்டால், சர்ச்சில் நம்மைக் கொன்றுவிடக் கூடும்," என்று ஸ்டாலின் குறிப்பிட்டிருக்கிருர்.

1945 பிப்ரவரியில் நடந்த அந்த யால்டா மாநாட்டில், தானும், ரூஸ்வெல்ட், சர்ச்சில் ஆகியோரும் உயிருடன் இருக்கும் வரையில், எந்த ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்திலும் ஒருபோதும் இறங்கமாட்டார்கள் என்று தான் நம்புவதாக, ஸ்டாலின் குறிப்பிட்டிருக்கிருர்.

"50,000 ஜெர்மானிய இராணுவ அதிகாரிகளைக் கொன்று குவிக்க வேண்டும்,' என்று மீண்டும் ஸ்டாலின் கூறுவார் என்று தான் நம்புவதாக ரூஸ்வெல்ட், அம்மாநாட்டில் கூறியிருக்கிருர்.

"ரூஸ்வெல்ட் முன்பைக் காட்டிலும், இப்போது அதிக 'இரத்த தாகம்' கொண்டவராக இருக்கிருர்,"

என்று, அமெரிக்க இராணுவத் தளபதி பொஷ்லென் அப்போது கூறினராம்.

இந்த யால்டா மாநாட்டிற்கு ஓராண்டிற்கு முன் நடைபெற்ற தெஹ்ரான் மாநாட்டில், 50,000 ஜெர்மானிய இராணுவ அதிகாரிகளைக் கொன்று குவிக்க வேண்டுமென ஸ்டாலின் கூறியிருக்கிருர்; அதைக் கேட்ட சர்ச்சில் கோபங்கொண்டவராய், இந்த இழிவான காரியத்தைச் செய்ய உடந்தையாயிருப்பதிலும், 'தோட்டத்திற்குச் சென்று, சில துப்பாக்கித் தோட்டாக்களால் தனது உயிரையே போக்கிக் கொள்ளலாம்,' என்று கூறினராம்.

தெஹ்ரான் மாநாட்டில், ரூஸ்வெல்ட், 'ஜெர்மனியை 6 அல்லது 7 துண்டுகளாக்கி விட்டால் போதும்,' என்று கூறியவர், பின்பு கிரிமியாவில் ஜெர்மானியர் நடத்திய அட்டகாசங்களைக் கண்டு மனம் பொருதவராய், யால்டா மாநாட்டில், 'ஸ்டாலின் கூறிய 50,000 ஜெர்மானிய இராணுவ அதிகாரிகளைத் தூக்கிலிடலாம்,' என்று கூறினராம்!

யால்டா மாநாட்டில் ஸ்டாலின், ரூஸ்வெல்ட் ஆகியோர் பேசி முடிவுக்கு வந்தவை :—

(1) சைபீரியாவில், அமெரிக்கா ஜப்பான்மீது விமானத் தாக்குதல் நடத்துவதற்காக விமான தளங்களை அமைத்துக் கொள்வதென்பதை ரஷ்யா ஒப்புக்கொள்கிறது.

(2) உலக சமாதானத்தை நிறுவுவதற்காக 'ஒரு அகில உலக ஸ்தாபனம் காணவேண்டும் என்று ஸ்டாலின கூறினர்.

(3) யுத்தத்தில் வென்று சமாதானத்திற்கு பாடுபட, சோவியத்தின் ஒத்துழைப்பைப் பெற, லாட்வியா, லித்தோனியா, எஸ்தோனியா ஆகியவற்றை ரஷ்யா திருப்ப தனக்கு வேண்டுமென்று கோருவதை ஏற்றுக் கொள்வது அவசியம் என ஒரு அமெரிக்க அதிகாரி வற்புறுத்தினர்.

(4) பிரான்சின் அன்றையத் தலைவர் ஜெனரல் டிகால், யால்டா மாநாட்டில் கலந்து கொள்வதை ரூஸ்வெல்ட் எதிர்த்தார்.

நேபாளத்தில் விசித்திர சட்டம்

மன்னர் இறந்தால் மக்கள் வருந்தலாம்; மகன் மட்டும் வருந்தக்கூடாது!

"நேபாள மன்னர் இறந்தால் நாட்டு மக்கள் அனைவரும் துக்கம் தெரிவிக்க வேண்டும்; ஆனல், இறந்துபோன மன்னருடைய சொந்த மகன் மட்டும் ஒரு துளிக் கண்ணீர்கூடச் சிந்தக்கூடாது; வாட்டம் கொண்ட முகத்துடனும் இருக்கக் கூடாது."

இப்படி ஒரு விசித்திரமான சர்க்கார் சட்டம் நேபாள நாட்டில் இருந்து வருகிறது!

மன்னர் இறந்ததும், அவரது மகன் ஆட்சிப் பொறுப்பைக் கவனிக்க வேண்டியவராகிவிடுவதால் தான், அவர் துக்கப்படக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறதாம்!

இவ்வுத்தரவின்படிதான், மன்னருடைய முதல் மைந்தரும், இப்போது மன்னர் பொறுப்பை ஏற்றிருப்பவருமான மகேந்திரா என்பவர், தமது தந்தையின் பிணத்தைக் கொண்டுவர விமான நிலையத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லையாம்; அதுமட்டுமல்லாமல், அவரது பிணத்தை எரிக்கும்போது கொள்ளியிடவும் அனுமதிக்கப்படவில்லையாம். இதன் காரணமாகத்தான், மன்னரது பிணத்திற்கு அவரது இரண்டாது மைந்தன் தீ மூட்டினராம்.

இறந்து போகின்ற மன்னரது மூத்தமகன் உப்புத் தண்ணீர் அருந்திவிட்டு மிருதுவான மெத்தையில் படுத்துறங்கி ஓய்வு பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அந்தச் சட்டம் மேலும் கூறுகிறது!

உப தேர்தலில் அரசாங்க அதிகாரிகள் காங்கிரஸ் கட்சிக்கு வேலைசெய்தனர்!

"மத்திய பாரத் சட்ட சபைக்கு, பீல்சா எனும் தொகுதிக்கும், மான்செளர் இடத்தில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலிலும் அதிகாரிகள் காங்கிரசுக்காக வேலை செய்திருக்கின்றனர்; இதுபற்றி விசாரிக்க வேண்டும்," என சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரான நிரஞ்சன் வர்மா, பத்திரிகையாளரிடம் கோரியுள்ளார்.

உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், மற்றும் கல்வி இலாகா அதிகாரிகள், விவசாய இலாகா அதிகாரிகள் ஆகியோரது பெயர்களையும் குறிப்பிட்டு, 'அவர்கள் எல்லாரும் காங்கிரஸ் கட்சிக்குதேர்தல் வேலையை பகிரங்கமாகச் செய்திருக்கிருர்கள்,' என்று குற்றம் சுமத்தியதுடன், அவர்களை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வர்மா கோரியிருக்கிருர்;

காதலின் வலிமை?

லக்னோ, மார்ச் 18—

"உங்கள் பெண்ணை எனக்கு மணம் செய்துதாருங்கள்; இன்றேல் என்னைக் கொன்றுவிடுங்கள்"

என்று கூறி, ஒரு இளைஞன், ஒரு பெண்ணின் தந்தைக்கு கடிதம் எழுதி, அத்துடன் ஒரு கைத்துப்பாக்கியையும் அனுப்பிவைத்தாராம்.

உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயிலும் அந்தப் பெண்ணை அவ்விளைஞர் காதலிக்கிறாராம். இதை, பெண்ணைப் பெற்றவர் முதலில் விரும்பவில்லையாம்.

ஆனால், பின்னர், கடிதம், கைத்துப்பாக்கி, இளைஞனின் துணிவு மிகுந்த போக்கு இவை அவரது மனதை மாற்றிவிட்டதாம். இப்போது திருமணத்திற்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றனவாம்.

இந்தி மொழி வெறியர்களுக்கு காமராசர் எச்சரிக்கை

என்றாலும் 'இந்தியே தேசீய மொழி' என்கிறார்!

சென்னை, மார்ச் 18—

"இந்தி வெறியர்கள், இந்தி மொழியை தாங்களாகவே பிரச்சாரம் செய்து பரப்பக்கூடாது; அவர்களது பிரச்சாரம், இங்குள்ள தமிழர்களிடை சந்தேகங்களையும், அவநம்பிக்கையையும் எழுப்புகின்றது."

"இந்தி மொழி பற்றி ஏராளமான கருத்து வேறுபாடுகள் இருப்பதால் தமிழ் நாட்டில் இந்தி பரவுவது, கட்டாயமின்றி சாவதானமாக நடைபெற வேண்டும்."

இந்தி ஏற்கனவே தமிழ் நாட்டில் இடம் பெற்றிருக்கிறது—சிறிது சிறிதாக, முன்பு ஆங்கிலம் இடம் பெற்றதைப் போல! எனவே, வடநாட்டவர், 'உடனடியாக மாற்றம் தேவை,' என்று வற்புறுத்தாமலும், இந்தி மொழியின் அவசியம் குறித்துப் பேசாமலும் இருப்பார்களானால் மிக நன்றாயிருக்கும்."

'இந்தி மொழி பேசுவோர் தொகையே இந்தியாவில் அதிகமிருப்பதால், இந்தியாவின் தேசிய மொழியாக இந்திதான் இருக்க முடியும்,"

என்று, முதன் மந்திரி காமராசர், திருச்சி இந்தி பிரச்சார சபையினர் தமக்களித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சென்னை சட்டசபையில்....

★

'திட்டம்' நிறைவேறுமா?

"தீண்டாமை ஒழிப்பு சம்மந்தமாக சாதி இந்துக்கள், அரிசனங்கள் ஆகியோர் கலந்து சமுகமாகப் பழகவும், இதர ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும், சென்னை மாநில சர்க்கார் ஒரு திட்டத்தைத் தயாரித்து; அத்திட்டத்தை நிறைவேற்ற ரூ. 6 லட்சம் தேவையென்றும் மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துள்ளனர்" என்ற தகவலை அரிசன இலாகா அமைச்சர் பரமேசுவரன் தெரிவித்தார்.

அனுமதி தர முடியாதாம்!

"சென்னை நகர போலீஸ் கான்ஸ்டபிள்கள் தங்களுக்கென ஒரு தனிச் சங்கம் நடத்த, பொது மக்களின் நலனை உத்தேசித்து அனுமதிக்கப்பட முடியாது," என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சுப்பிரமணியம் கூறினார்.

"அம்மாதிரி தனிச் சங்கம் நிறுவுவதற்கென எவ்வித கோரிக்கையும் வரவில்லை," என்றும் அவர் தெரிவித்தார்.

இன்னுமா இந்த சின்னம்?

"சென்னை நகரிலுள்ள சில பொது இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் வெள்ளை ஆட்சியினரின் சின்னங்கள், சிலைகள் ஆகியவைகளை அந்த இடங்களிலிருந்து நீக்குவது பற்றிய உத்தேசம் சர்க்காருக்கு இல்லை," என்று அமைச்சர் சுப்பிரமணியம் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"அந்த வெள்ளைக்காரர்களின் சிலைகளுக்குப் பதிலாக, வ. உ. சி., திரு. வி. க. ஆகியோரின் சிலைகள் நிறுவுவது கவனிக்கப்படுமோ?" என்று தோழர் வ. கோவிந்தசாமி கேட்டபோது, "இப்பெரியார்களின் சிலைகளை நிறுவவேண்டுமென்பதற்காகத் தற்போது இருந்து வருபவைகளை எடுத்துவிட வேண்டுமென்பது அவசியமில்லை; அவற்றை நிறுவுவதற்கு இன்னும் வேண்டிய அளவு இடங்கள் இருக்கின்றன; இம்மாதிரியான பெரியார்களுக்கு ஞாபகார்த்தம் ஏற்படுத்த உறுப்பினர் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே என்னுடைய ஆசையும் ஆகும்" என்று கூறினார்.

விற்பனை வரியில் சங்கடம்?

"வரி விசாரணைக் குழு இப்போது தனது அறிக்கையைச் சமர்ப்பித்துவிட்டபடியால், அதற்கேற்ப விற்பனை வரி சட்டப்பிரச்சினைகளைக் கவனிக்க முதலாவது ஏற்பாடுகள் செய்ய, விரைவில் அதிகாரிகள் மாநாடொன்று கூட்டப்படும்" என்று அமைச்சர் மாணிக்கவேலர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"சென்ற ஆண்டின் விற்பனை வரி, எதிர்பார்த்ததைவிட ஓரளவு குறைந்தே இருக்கிறது; இதற்கு வர்த்தக மந்தம், ஆந்திரப் பிரிவினை ஆகியவைகளே காரணம்" என்றும் அவர் கூறினார்.

மேலும் அவர், விற்பனை வரியைச் செலுத்தாமல் சில வியாபாரிகள் அதனை மறைப்பது உண்மையே என்றும், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடாகிவருகிறதென்றும் தெரிவித்தனர்.

நினைவுறுத்தத் தேவையில்லையாம்!

"பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் விடுதலைக்காகப் போராடி உயிர் துறந்த 'தியாகி'களின் குடும்பத்தினருக்குப் 'பென்ஷன்' அளிக்க வேண்டுமென மத்திய சர்க்காருக்குக் கோரிக்கை அனுப்பியிருக்கிறதா?" என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, 'இல்லை' என்று அமைச்சர் சொல்லிவிட்டு, மத்திய சர்க்காருக்கு தனது கடமை தெரியும் என்றும், மாநில சர்க்கார் இதனை நினைவுறுத்தத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கருணை பிறக்கிறதா?

க்ஷயரோக வியாதியால் பீடிக்கப்பட்டுக் குணமடைந்தவர்களுக்கென தாம்பரத்தில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள மூன்றுன் க்ஷயரோக வியாதிக்காரர்கள் காலனிக்கு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சில அபிவிருத்திகளைச் செய்ய, மாநில சுகாதார, மருத்துவ இலாகா டைரக்டர் சில திட்டங்களைத் தயாரித்து வருவதாக அமைச்சர் ஷெட்டி தெரிவித்திருக்கிறார்.

இந்தக் காலனியில் மொத்தம் 15 பேர்கள் இருப்பதாகவும், அவர்களுக்குப் பிற்பகல் இலவச உணவு, ஊதியம் ஆகியவற்றிற்காக ரூ. 26,800 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஒரு நபருக்கு, அச்சுக்கூடத்தில் தினமொன்று 4 மணி நேரம் வேலை தந்து, ஊதியமாக ரூ. 1-ம் தரப்படுகிறது என்றும் தெரிவித்திருக்கிறார்.

* *

தி. மு. கழகக் கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை

தி. மு. கழகச் சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர், பேரூர்க் கிளை [சிறிய-பெரிய பஞ்சாயத்து (Minor-Major Panchayat) ஆட்சிப்பகுதி]—நகரக் கிளை [நகர மன்ற (Municipality) ஆட்சிப் பகுதி] உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 27—3—55 ஞாயிற்றுக் கிழமையைத் தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும், அல்லது புதிதாகக் கிளை துவக்கியிருந்தாலும் அப்படிப்பட்ட கிளைக் கழகங்களும் 27—3—55 ஞாயிறன்று கூடி செயற்குழுவை உறுதி செய்து கொண்டு, மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ உறுதிப்படுத்திக்கொள்ளவோ வேண்டும்.

கழக உறுப்பினர்களாய் இருந்துவருபவர்கள் தங்கள் உறுப்பினர் நிலையை இப்பொழுது புதுப்பித்துக் கொள்ள வேண்டியதில்லை. 28—2—55-ஆம் நாளுக்கு முன் உறுப்பினராகி இருப்பவர்கள் மட்டுமே இந்தத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்க உரிமையுடையவராவர். உறுப்பினர் சேர்ப்பது இரண்டு திங்கள்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. 1—3—55-ஆம் நாளுக்கு மேல் புதிதாக உறுப்பினராகச் சேர்பவர்கள் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது. 1—3—55-க்குப் பிறகு அமைக்கப்பெறும் கிளைகள் இப்பொழுது பதிவு செய்துகொள்ளப்படமாட்டா. புதிய பொதுக்குழு அமைந்ததற்குப் பிறகுதான் அவை கவனிக்கப் பெறும்.

கிளைக் கழகங்களெல்லாம் 27—3—55-ல் தேர்தல் நடத்தித் தேர்தலின் முடிவுகளை, தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப் பெறும் "கிளைக்கழகப் பதிவுச் சீட்டி"ல் தெளிவாகக் குறித்து 31—3—55-ம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக அந்தச் சீட்டில் எழுதி அனுப்பவேண்டும்.

தேர்தலின் முடிவு குறிக்கப்பட்ட கிளைக்கழகப் பதிவுச் சீட்டு, தலைமை நிலையம் வந்து சேர்ந்தால்தான், ஒவ்வொரு கிளைக் கழகமும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

27—3—55-ல் தேர்தல் நடத்தும் கிளைக்கழகம் மட்டுமே மாவட்டக்கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகிவிட்டது என்று இருத்தல் கூடாது.

27—3—55-ல் கிளைக் கழகத் தேர்தல் நடத்தவேண்டிய மாவட்டங்கள்:

சென்னை
செங்கற்பட்டு
தென் ஆற்காடு
வட ஆற்காடு
சேலம்
கோவை
தஞ்சை
திருச்சி
மதுரை
இராமநாதபுரம்
திருநெல்வேலி
நாஞ்சில்
கேரள, ஆந்திர,
கர்நாடகப் பகுதிகள்

தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்:

1. ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்—Minor Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர்—Major Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப் பகுதி—Municipality) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட நகரக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
4. சென்னையில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் (Division) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட வட்டக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
5. சிற்றூர் — பேரூர் — நகரம் — சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும்போது, அந்தந்தக் கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து எல்லா உறுப்பினர்களும் கூடவேண்டும். [நகரங்களிலுள்ள வட்டாரங்கள் (Municipal Wards) இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டியதில்லை. நகரக் கிளை தேர்தல்தான் இப்பொழுது நடைபெற வேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக் கிளைத் தேர்தலில் ஒருபடியாகக் கலந்துகொள்ள வேண்டும். நகரக் கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் (Municipal Ward) நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரக் கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின்கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக் கொண்டு இயங்கலாம்.]
6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
7. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
8. சிற்றூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், பேரூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக் கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக் கிளை அந்தந்த நகர மக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
9. தேர்தல் கிளைக் கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்பட வேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால், கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம், தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டக் கழகம் அனுப்பி வைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக்கிளைத் தேர்தல் நடைபெற வேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்தி வைக்க, மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பி வைக்கலாம்.
10. தேர்தல் நடைபெறும் போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானால், கூடும் கழக உறுப்பினர்கள், அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயல வேண்டும். அவசியமானால் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.
11. தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே, கிளைச் செயலாளர், கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்ட வேண்டும்.
12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின்மூலம், தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிற்பாடு ஆய்ந்தறிந்து தீர்ப்புக் கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளப்பக்கூடாது.

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

'அறிவகம்', சென்னை.
5—3—55

* *

நிதி மந்திரி சுப்பிரமணியம் மத்திய அரசாங்கத்தைச் சாடுகிறார்!

கைத்தறி நெசவு வாழ வழி என்ன?

சென்னை கைத்தறி வார விழாவில் பேச்சு

சென்னை, மார்ச் 21—

"சில ரக துணிகளைக் கைநெசவுக்கென ஒதுக்கினாலொழிய கைத்தறித் தொழிலுக்கு விமோசனம் இல்லை,"

என்று, சென்னை நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள், சென்னையில் நேற்று நடைபெற்ற அகில இந்திய இரண்டாவது கைத்தறி வாரக் கொண்டாட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேற்று மாலை, சென்னை எழும்பூர் 34, பாந்தியன் ரோடிலுள்ள சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தில் மேற்படி விழா நடைபெற்றது. வார ஆரம்பவிழா, சென்னை சட்டசபை சபாநாயகர் ஜே. சிவசண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் சுப்பிரமணியம் பேசுகையில் மேலும் குறிப்பிட்டார்:—

"துணி ஆலைகளின் போட்டியிலிருந்தும் கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்பதே சில ரகங்களைக் கைநெசவுக்கு ஒதுக்கிவிட வேண்டுமென்று கூறுவதின் நோக்கமாகும்; இதுதான் இந்தப் பிரச்சினை தீருவதற்கான நேரான—நியாயமான—சுலபமான பரிகாரமும் ஆகும்."

"இவ்வாறு தனிப்பட்ட ரகங்களை கைத்தறிக்கே ஒதுக்கிவிட வேண்டுமென்ற இக்கொள்கையை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிரச்சினையை வேறு எவ்விதத்திலும் தீர்த்துக் கொள்ள முடியாது."

மேற்படி சங்கத் தலைவர் தோழர் எம். பி. நாச்சிமுத்து அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், கைநெசவுத் தொழில் அழிந்துபோகாமல் பாதுகாத்தமைக்காக மத்திய, மாநில சர்க்கார்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, மேலும் குறிப்பிட்டார்:—

"கைத்தறி பற்றிய கனுங்கோ அறிக்கையை சர்க்கார் அமுல் நடத்துவதானால் நிச்சயம் கைநெசவுத் தொழில் நசிக்கப்பட்டுவிடும்; பல இலட்சம் நெசவாளர்கள் தங்கள் வேலையை இழந்துவிடுவர்," என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவையொட்டி, அகில இந்திய கைத்தறிக் குழுவின் துணைத் தலைவரான எம். ஆர். காசிமி, கைத்தறிக் கண்காட்சி ஒன்றைத் திறந்து வைத்தார்.

கைத்தறித் துணிகள் பற்றி மக்களிடைய பிரச்சாரம் செய்வதற்கென 6 மோட்டார் வண்டிகளை விடுவது என்று மேற்படி சங்கம் திட்டமிட்டுள்ளது. இவற்றுள் 3 வண்டிகள் நேற்று ஓட ஆரம்பித்துள்ளன.

சென்னை, சேலம், கோழிக்கோடு, திருச்சி, தஞ்சை, நெல்லை ஆகிய 6 மாவட்டங்களுக்கும், ஒன்று வீதம் மேற்படி 6 வண்டிகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

ஆந்திர முதல்வராக கோபால்ரெட்டி தேர்வு

பிரகாசத்தின் நிலை என்ன?

விஜயவாடா, மார்ச் 20—

ஐக்கிய ஆந்திர மாநில காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவராக, ஆந்திர பிரதேச காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பி. கோபால ரெட்டி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கோபால் ரெட்டி சீக்கிரமே கர்னூல் சென்று கவர்னரைச் சந்தித்து, தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை அறிவிப்பார் என்றும், பின் அங்கிருந்து டெல்லி சென்று காங்கிரஸ் மேலிடத்தின் ஆலோசனையுடன், தமது மந்திரி சபைப் பட்டியலைத் தயாரிப்பார் என்றும் தெரியவருகிறது.

காளா வெங்கட்ராவ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கோபால் ரெட்டி பெயரை என். சஞ்சீவி ரெட்டி பிரரேபித்தார்; கிருஷிக்லோக் கட்சி செயலாளரான லட்சண்ணா, அதனை வழிமொழிந்தார்; ஆந்திராபிரஜா கட்சி செயலாளர் பி. இரக்மகிருஷ்ண ரெட்டி அதனை ஆதரித்தார்.

வேறு எவர் பெயரும் பிரரேபிக்கப்படாததால், கோபால் ரெட்டி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

டி. பிரகாசம் உள்ளிட்ட 140 உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்; டி. விஸ்வநாதம், காளா வெங்கட்ராவ், லட்சண்ணா, கோட்டி ரெட்டி உள்ளிட்ட பலர், கோபால் ரெட்டியைப் பாராட்டிப் பேசினர்.

பி. கோபால் ரெட்டி பாராட்டுதலுக்கு நன்றி தெரிவிக்கையில் அனைவருடையவும்—குறிப்பாக பிரகாசத்தினுடையவும்ஒத்துழைப்பைப் பெரிதும் கோருவதாகவும், இம் மாநிலத்திற்கு தாம் முதல் பணியாளராயிருந்து தனது கடமைகளைச் சரிவரச் செய்வதாயும், நாட்டில் நிலவும் வேலையின்மை, பஞ்சம் ஆகியவை போகப் பாடுபடுவதாயும், அபிவிருத்தித் திட்டங்களில் ஆந்திராவுக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பங்குகளைப் பெற எல்லா முயற்சியும் செய்வதாயும் தெரிவித்து நன்றி கூறிக் கொண்டார்.

★★★★★★★ ★★★:★★★★★★★

தூத்துக்குடி நகர தி. மு. கழக கிளைத் தேர்தல்

தூத்துக்குடி நகரத் தி. மு. க. கிளைத் தேர்தல் 27—3—55 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணி அளவில் தூத்துக்குடி வடக்கூர் பார் கிளப்பில் நடைபெறும். சென்னைத் தோழர் கே. எம். கண்ணபிரான் தேர்தல் ஆணையாளராக இருந்து நேர்தலை நடத்திவைப்பார். தூத்துக்குடி நகர எல்லைக்குள் 28—2—55-ம் நாளுக்கு முன் உறுப்பினரான தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும் கூடி தேர்தலைச் சிறப்பாக நடத்துவார்களாக.

சி. என். அண்ணாதுரை,
பொதுச் செயலாளர்

'அறிவகம்', சென்னை.
20—3—55

★★★★:★★★★:★★★★★:★★★★

கைத்தறி வார விழா

24—3—55 காலை 9 மணி முதல், செங்கற்பட்டு மாவட்டம், உத்திரமேரூரை அடுத்துள்ள மானமதி கிராமத்தில் கைத்தறி வார விழாக் கொண்டாட்டம் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில்தோழர்கள் இராம. அரங்கண்ணல், சி. வி. எம். அண்ணாமலை, அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசுவர்.

சென்னை 40-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

23—3—55 மாலை 7½ மணிக்கு தோழர் க. அப்பாதுரையார் இல்லத்தில் (எண் 13, அருணாசல ஆச்சாரி தெரு, சென்னை-5), சென்னை 40-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும்.

சென்னை மாகாண கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

34, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை

★

இரண்டாவது அகில இந்திய கைத்தறி வாரக் கொண்டாட்டம்

நிகழ்ச்சி நிரல்

பொதுக்கூட்டம் 21—3—1955 மாலை 6 மணி
தலைவர்: முதலமைச்சர் திரு. கே. காமராஜ் நாடார்
சொற்பொழிவாளர்கள்: திரு. டி. செங்கல்வராயன், பி.ஏ., எல்.எல்.பி., திரு. எம். எஸ். ஏ. மஜீத்
நாடகம்: சிவாஜி கணேசன் குழுவினர் மாலை 6-30 மணி

பொதுக்கூட்டம் 22—3—1955 மாலை 6 மணி
தலைவர்: சர். பி. டி. இராசன், பார்-அட்-லா
சொற்பொழிவாளர்: திரு. சி. என். அண்ணாதுரை, எம். ஏ.
நாடகம்: 'புது வாழ்வு' கோ-ஆப்-டெக்ஸ் நாடகக் கழகம் மாலை 6-30 மணி

பொதுக்கூட்டம்: 23—3—1955 மாலை 6 மணி
தலைவர்: திரு. எம். பக்தவத்சலம், பி.ஏ.பி.எல்., விவசாய, தொழில் அமைச்சர்
சொற்பொழிவாளர்: திரு. ம. பொ. சிவஞானம்
நாடகம்: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினர் மாலை 6-30 மணி

பொதுக்கூட்டம்: 24—3—1955 மாலை 6 மணி
தலைவர்: திருமதி சரோஜினி வரதப்பன்
சொற்பொழிவாளர்கள்: டாக்டர் சவுந்தரம் இராமச்சந்திரன், எம்.எல்.ஏ., குமாரி டி. என். அனந்தநாயகி, பி.ஏ பி.எல்.
இன்னிசை: இசைக்குயில் எம். எல். வசந்தகுமாரி மாலை 6-30 மணி

மாணவர் தினம்: 25—3—1955
தலைவர்: திரு. என். டி. சுந்தரவடிவேலு, எம்.ஏ, எல்.டி. கல்வி இலாகா டைரக்டர்
குழந்தைகள் விளையாட்டு விழா: மாலை 4-30 மணி
பொதுக்கூட்டம்: மாலை 5-30 மணி
சொற்பொழிவாளர்: மாணவர் சொற்பொழிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்
கலை விருந்து: மாலை 7 மணி
வில்லுப்பாட்டு—சென்னை அரசினர் கல்லூரி மாணவர்களால்

பொதுக்கூட்டம்: 26—3—1955 மாலை 6 மணி
தலைவர்: கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா
சொற்பொழிவாளர்கள்: திரு. அ. பழனியப்ப முதலியார், எம்.ஏ., கூட்டுறவு ரிஜிஸ்திரார், டாக்டர் மு. வரதராசனார், M.A., Ph. D.
கலை விருந்து: துவாரம் வெங்கடசாமி நாயுடு & பழனி சுப்ரமணியம் மாலை 6-30 மணி

இலவச அனுமதி

M.P. நாச்சிமுத்து, B.A.B.L., தலைவர் — N. கஜேந்திரன், B.A., Dip in Econ. பிசினஸ் மானேஜர்

மற்றும் அதிர்ஷ்டப் பரிசு, ஏல விற்பனையும் உண்டு

தர்ம சத்திரம் சூதாடும் மடமாயிற்று!

125 சீட்டுக்கட்டுகள், 3,000 ரூபாயுடன் 160 சூதாடிகள் கைது

ஜாம்புசார் (புரோச் மாவட்டம்) மார்ச் 19—

ஜாம்புசார் போலீசார், தாந்த்ரி எனும் கிராமத்தில் நடைபெற்ற சந்தை ஒன்றின்போது அங்கிருக்கும் தர்ம சத்திரம் ஒன்றில் (மடம்) சூதாடிக் கொண்டிருந்த 160 பேர்களைக் கைது செய்தனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

அந்த 'தர்மசாலை'யை சூதாடும் மடமாக்கிய அந்த 160 பேர்களிடமிருந்தும் சுமார் 125 சீட்டுக்கட்டுகளையும், சுமார் மூவாயிரம் ரூபாயினையும் போலீசார் கைப்பற்றினர் என்று தெரிகிறது.

10 வயது சிறுமியை மணப்பதா?

மணமகனின் துணிகரச் செயல்

மைசூர், மார்ச் 18—

தனது சொந்த திருமணத்தையே நிறுத்தி வைக்க மணமகன், நீதிமன்றத்தின் உதவியை நாடவேண்டிய அவசியமேற்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

மகாதேவய்யா என்ற அந்த மணமகன், 10 வயதுடைய லட்சம்மா என்ற பெண்ணை மணப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததை அவர் வெறுத்திருந்தும், அவரது பெற்றோர் பிடிவாதமாக அத்திருமணத்தை நடத்த ஏற்பாடுகள் செய்தனர்; எனவே அவர், இத்திருமணம் சட்ட விரோதமானதாக இருப்பது மட்டுமல்லாமல், தமது விருப்பமில்லாமலேயே நடைபெறுவதாக இருப்பதால், அதனை நிறுத்தும்படி கோரி, நகர மாஜிஸ்திரேட்டிடம் மனுச் செய்துகொண்டார்; மாஜிஸ்திரேட் அத்திருமணத்தை நிறுத்திவிடும்படி இரு தரப்பினருக்கும் உத்திரவிட்டாராம்.

இரு தரப்பினரும் (மணமகன், மணப்பெண் வீட்டார்) கோர்ட்டில் சென்று, திருமணத்தை நிறுத்திவிட்டதாகத் தெரிவித்ததின் பேரில் புகார் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டதாம்!

தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி

சென்னையில் இரண்டு காலனிகள்

தொழிலாளருக்கு வீட்டு வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் சென்னை சர்க்கார், சென்னை நகரின் எல்லையிலிருக்கும் செம்பியம், எருக்கஞ்சேரி ஆகிய இரண்டு இடங்களிலும் இரண்டு காலனிகள் அமைக்க அங்கீகாரம் செய்துள்ளதாம்

இத்திட்டத்திற்கு மத்திய சர்க்கார், பாதித் தொகையைக் கடனாகவும், பாதித் தொகையை மானியத் தொகையாகவும் நிதி உதவி செய்யும்.

இக்காலனிகளில், ஒரே அடுக்காக ஒரு அறை கொண்டவையாக, செம்பியத்தில் 486 வீடுகளும், எருக்கஞ்சேரியில் 450 வீடுகளும் கட்டப்படும்.

இதற்கு மொத்தம் ரூ. 2803840 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

ஒப்பந்தம் தரும் பலன் ஒப்புவரோ? திராவிடர் துயர்தனைத் தேர்வரோ?

கொழும்பு, மார்ச் 19—

இலங்கை, இந்தியப் பிரதமர்கள் கடந்த அக்டோபர் திங்களில் புதுப்பித்துக் கொண்ட ஒப்பந்தப்படி இதுவரை இலங்கை சர்க்கார் 12 பேர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கியுள்ளது. இந்த நான்கு மாத காலத்தில் 1,20,513 பேர்களுக்கு, குடியுரிமை மறுத்துத் தீர்ப்பளித்திருக்கிறது எனத் தெரிகிறது.

இலங்கை குடியுரிமைச் சட்டத் திருத்த மசோதா இப்போது இலங்கை மக்கள் சபையில் நிறைவேறிவிட்டது. அந்த மசோதா விவாதத்தின்போது இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

அரசியல் சட்ட அடிப்படை உரிமைகள்

காங்கிரசின் கொள்கை மாற்றம் பற்றி அம்பேத்கார்

புதுடில்லி, மார்ச் 20—

"அரசியல் சட்டம் தயாரிக்கப்படுகையில், காங்கிரஸ் கட்சி, 'அடிப்படை உரிமைகளை, விலை மதிக்கவொண்ணாத ஒரு ஆபரணமாகக் கருதிக் காப்பாற்ற வேண்டும்' என்று கருதியது; ஆனால், இப்போது அதன் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது; சந்தர்ப்பம் வரும்போதெல்லாம், 'உடைக்கக்கூடிய ஏதோ ஒரு சங்கிலி,' என்று அதை எண்ணுகிறது; அடிக்கடி, அரசியல் சட்டத்தைத் திருத்துவது மிகவும் பயப்படத்தக்கதாகும்; அம்மாதிரியான நிலை, நாட்டின் சட்டங்களில் தீர்க்கமுடியாத சிக்கல்களை உருவாக்கிவிடும்,"

என்று, அம்பேத்கார், டில்லி மேல் சபையில் அரசியல் சட்டத்தின் 31-வது விதியைத் திருத்த வேண்டும் என்ற மசோதா விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

அந்த விதிப்படி, 'தனிப்பட்டோரின் உடைமைகளை சர்க்கார் ஏற்றுக் கொள்ளும்போது, நஷ்டஈடு தரவேண்டும்,' என்றிருப்பதை, 'கூடாது' என்ற கருத்துப்பட பண்டித நேரு கூறியிருக்கிறார்.

டாக்டர் அம்பேத்கார், 'நஷ்டஈடு தரவேண்டும்' என்று கருதுகிறாராம்!

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.